# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 22/2022** **நாள்: 03.02.2022**

## நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டு தமிழ்நாடு முழுவதும் 699 மூத்த அதிகாரிகள் வட்டார பார்வையாளர்களாக (Block Observers) நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகள் என 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, தேர்தல்கள் 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தலில், நியமிக்கப்பட்ட வட்டார பார்வையாளர்கள், கோவிட்-19 தொடர்பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் 100 சதவீதம் சரியாக கடைபிடிப்பதை உறுதி செய்தல், வேட்பு மனு தாக்கல், வேட்பு மனுக்களை ஆய்வு செய்தல், வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுதல் போன்ற நிகழ்வுகளை சிசிடிவி மூலம் பதிவு செய்வதை உறுதிபடுத்துதல், தேர்தல் குறித்து பொதுமக்கள், அரசியல் கட்சி பிரதிநிதி மற்றும் வேட்பாளர்களிடமிருந்து வரப்பெறும் புகார் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வாக்கு எண்ணுகை மையத்தில் போதிய அடிப்படை வசதிகளை உறுதி செய்தல் உள்ளிட்ட முன்னேற்பாடு நடவடிக்கைகளை வட்டார அளவில் கண்காணிக்கவும் மற்றும் மாவட்ட தேர்தல் பார்வையாளர்கள் / இந்திய ஆட்சி பணி அலுவலர்களுக்கு (Election Observers) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறும் தேர்தல் நிகழ்வுகளை கண்காணித்து உடனுக்குடன் தகவல்களை தெரிவிப்பதற்காகவும் தமிழ்நாடு முழுவதும் 699 மூத்த அதிகாரிகள் வட்டார பார்வையாளர்களாக (Block Observers) நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நியமிக்கப்பட்டுள்ள வட்டார பார்வையாளர்களின் பெயர், பதவி மற்றும் அலைபேசி விவரங்கள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதள முகவரி http://tnsec.tn.nic.in-ல் உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

3/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்